# SIR: அரசியல் உள்நோக்கத்துடன் அரங்கேற்றம்!

இந்திய தேர்தல் ஆணையத்தின் “சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கையின் மூலம் வாக்காளர்களைப் பெரும் எண்ணிக்கையில் நீக்கப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம்! ஜனநாயகத்தை கேலிக்குரியதாக்கும் நடவடிக்கை அரசியல் உள்நோக்கத்துடன் அரங்கேற்றம் செய்யப்படும் முயற்சிதான் என்பதில் ஐயமில்லை!!

இந்தியாவிற்கு உலகளாவிய பெருமை எதுவேனில், இந்தியத் துணைக் கண்டம் ஜனநாயகத்தை ஆட்சிமுறையாக ஏற்றுக் கொண்டு நாட்டின் விடுதலைக்குப் பின்னர், தொடர்ந்து 78 ஆண்டுகள் பிளவுபடாமல் ஒற்றுமை உணர்வுடன் ஒன்றுபட்டு இருக்கின்ற அந்த வரலாறும், அதற்கான ஆட்சிக்கட்டமைப்பும்தான் இன்னும் இந்தியாவை உலக அரங்கில் உயர்த்திவைத்துப் பார்க்கிறது.

உலக நாடுகளின் இத்தகைய் போற்றுதலுக்கு அடிப்படையான காரணம் ஜனநாயகக்குடியரசாகவும், சமதர்மம்மதச்சார்பற்ற மனிதநேயக்கோட்பாடுகளை அரசியல் சட்டத்தின் மூலம் ஏற்றுக்கொண்டதும்தான் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். இந்திய ஒன்றியத்தைச் சுற்றியுள்ள பாகிஸ்தான், வங்காளதேசம், பர்மா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்திய ஒன்றியத்தில்தான் பெரும்பான்மையான மக்களின் எண்ணங்களுக்கும் அபிலாசைகளுக்கும் ஏற்ப ஒன்றியத்திலும், மாநிலங்களிலும் சட்டங்களையும்திட்டங்களையும் உருவாக்கிட முடியும். அனைத்து மக்களது எண்ணங்களின் பிரதிபலிப்பாகவே ஒன்றிய அரசும்,மாநில அரசுகளும் ஆட்சியின் நிர்வாக நடைமுறைகளை மேற்கொள்ளும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் ஐந்தாண்டுக் காலத்தில் மக்களின் எதிர்பார்ப்புகளையும், அபிலாசைகளையும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கானத் திட்டங்களையும் செயல்படுத்த தவறுமானால், ஐந்தாண்டு ஆட்சிக்காலம் முடிந்தப்பின் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மக்கள் விரோத ஆட்சிகளைத் தேர்தல்கள் மூலம் மக்கள் அப்புறப்படுத்திவிடுவார்கள்.

எனவே, ஒன்றியத்திலும் மாநிலங்களிலும் மக்களின் எண்ணங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் முரண்படும் எந்த ஆட்சியும் ஐந்தாண்டுகால முடிவுக்குப்பின் தொடர வியலாது. மக்களின் ஜனநாயக முடிவுகள் ஒன்றியத்திலும் மாநிலங்களிலும் பொதுத் தேர்தல்கள் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. இதில், மக்களின் ஆதரவினைப் பதிவு செய்வதற்கான அடிப்படை ஆவணம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

18 வயது நிரம்பிய ஆண்பெண் ஆகிய இருபாலருக்கும் வழங்கப்படும் வாக்குரிமை அடையாள ஆவணமாகும். எனவே, வாக்குரிமை அடையாள அட்டை உள்ளவர்கள் மட்டும்தான் ஒன்றியத்திலும்,மாநிலங்களிலும் யார் ஆட்சிக்கு வர வேண்டுமென்பதை முடிவு செய்யும் உரிமை பெற்றவர்களாவர். இந்த ஜனநாயக கடமையை ஐந்தாண்டுக்கு ஒரு முறை நிறைவேற்றும் பொழுது ஒவ்வொருவருக்கும் வாக்களிக்கும் உரிமையை இந்திய தேர்தல் ஆணையம் உத்திரவாதப்படுத்த வேண்டும். இத்தகைய உத்திரவாதப்படுத்தும் பணியில் ஈடுபடும் பொழுது தேர்தல் ஆணையம் உரிய கால அவகாசம் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு இல்லத்திற்கும் பணியாளர்களை அனுப்பி ஆய்வு செய்து இருப்போர்,இடம்பெயர்ந்தோர், இறந்தோர் புதியதாக வாக்களிக்கும் உரிமைப் பெற்றோர் யார்யார் என்ற விபரங்கள் அடங்கியப் புள்ளி விவரங்களை கிஞ்சிற்றும் பிழையின்றி மேற்கொண்டு வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர் நிலை
செயல்திட்டக் குழு உறுப்பினர்

இந்தப் பணிக்கான கால அவகாசம் தேவைப்படும் அளவிற்கு வழங்கிட வேண்டும். பின்னர், வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு, வாக்காளர்களின் பார்வைக்கு வைக்க வேண்டும். அடுத்தகட்டமாக விதிகளின் அடிப்படையில் வாக்காளர்களுக்கு காலஅவகாசமும், வாய்ப்பும் வழங்கிய பின்னர் இறுதிவாக்காளர் பட்டியல் தயார் செய்து வெளியிடவேண்டும்.

ஆனால் இந்திய தேர்தல் ஆணையம்,எத்தகைய சூழ்நிலையில் இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிக்கான (Special Intensive RevisionSIR) ஆணையினை வெளியிட்டுள்ளது என்பதை அனைத்து தரப்பு மக்களும், ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மேலும்,தேர்தல் ஆணையத்தின் இந்த அவசர முடிவு சட்டமன்ற தேர்தல்கள் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ள மாநிலங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்காக இந்திய தேர்தல் ஆணையம் கணக்கீட்டுப் (Enumeration Form) படிவங்களை ஒவ்வொரு இல்லமாக நவம்பர் முதல் வாரத்தில் வழங்கியிருக்கிறது. பூர்த்தி செய்யப்பட்ட இந்த படிவங்களை டிசம்பர் மாதம் நான்காம் தேதிக்குள் வாக்குச்சாவடி அதிகாரியிடம் (BLO) வழங்கிட வேண்டுமென இந்த அதிகாரிகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படிவத்தில் “முந்தைய சிறப்பு தீவிர திருத்தத்தின் உள்ள வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளது”. இந்த விவரங்களை உறுதிப்படுத்தும் வகையில் “முந்தைய சிறப்புத் தீவிரத் திருத்தத்தின் வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளரின் உறவினர் பெயர்” கோரப்பட்டுள்ளது. இந்த இரண்டு பகுதிகளில் வாக்காளர்கள் வழங்கும் விவரங்கள் ஒத்துப்போகாவிடில், வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) ஒரு அறிவிப்பை வழங்குவார் என்றும், அந்த அறிவிப்பைப் பெறும் வாக்காளர்கள் கீழ்கண்ட வகைகளுக்கேற்ப ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஆவணங்கள் பின்வருமாறு,

- 01.07.1987 க்கு முன்பு இந்தியாவில் பிறந்திருந்தால்
  - பிறந்த தேதி மற்றும்/அல்லது பிறந்த இடத்தை நிரூபிக்கும் வகையில் கீழே வழங்கப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தங்களுக்கு (Self) உரிய ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்கவும்.
- 01.07.1987 முதல் 02.12.2004 வரை உள்ள காலப் பகுதியில் இந்தியாவில் பிறந்திருந்தால்
  - பிறந்த தேதி மற்றும்/ அல்லது பிறந்த இடத்தை நிரூபிக்கும் வகையில் கீழே வழங்கப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தங்களுக்கு (Self) உரிய ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்கவும்.
  - தந்தை அல்லது தாயின் பிறந்த தேதி மற்றும்/அல்லது பிறந்த இடத்தை நிரூபிக்கும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் இருந்து ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்கவும்.
- 02.12.2004 க்குப் பிறகு இந்தியாவில் பிறந்திருந்தால்.
  - பிறந்த தேதி மற்றும்/அல்லது பிறந்த இடத்தை நிரூபிக்கும் வகையில் கீழே வழங்கப்பட்டுள்ள பட்டியலில் இருந்து தங்களுக்கு (Self) உரிய ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்கவும்.
  - தந்தை அல்லது தாயின் பிறந்த தேதி மற்றும்/அல்லது பிறந்த இடத்தை நிரூபிக்கும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் இருந்து ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்கவும்.
  - பெற்றோரில் யாரேனும் ஒருவர் இந்தியர் அல்லாதவர் என்றால் நீங்கள் பிறந்த நேரத்தில் அப்போதைய அவரது செல்லுபடி ஆகிய கடவுச்சீட்டு மற்றும் நுழைவிசைவின் நகலை சமர்ப்பிக்கவும்.
- இந்தியாவிற்கு வெளியே பிறந்திருந்தால் (வெளிநாட்டில் உள்ள இந்தியத் தூதரகம் வழங்கிய பிறப்புப் பதிவுச் சான்றினை இணைக்கவும்)
- பதிவு /இயல்பு நிலை வாயிலாக இந்திய குடியுரிமையைப் பெற்றிருந்தால் (குடியுரிமைப் பதிவுச் சான்றிதழை இணைக்கவும்)

கணக்கீட்டுப் படிவத்துடன் (Enumeration Form) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் குறிப்பான பட்டியல் இதனடியில் படிவத்தில் கண்டுள்ளபடி பட்டியலிடப்பட்டுள்ளது.

1.மத்திய அரசு/மாநில அரசு/பொதுத்துறை நிறுவனத்தின் நிரந்தர ஊழியர்/ ஓய்வூதியதாரருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அடையாள அட்டை/ ஓய்வூதிய ஆணை.

2. 01.01.1987க்கு முன்னர் இந்தியாவில் அரசு உள்ளாட்சி அமைப்புகள்/ வங்கிகள்/ அஞ்சல் அலுவலகம்/ எல்ஐசி/ பொதுத்துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட ஏதேனும் அடையாள அட்டை/சான்றிதழ்/ ஆவணம்.

3. தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்.

4. கடவுச்சீட்டு

5. அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களால் வழங்கப்பட்ட மெட்ரிக்குலேஷன்/ கல்விச் சான்றிதழ்.

6. தகுதிவாய்ந்த மாநில அதிகாரியால் வழங்கப்பட்ட நிரந்தர வசிப்பிடச் சான்றிதழ்.

7. வன உரிமைச் சான்றிதழ்

8. தகுதிவாய்ந்த அதிகாரி வழங்கிய இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(OBC)/அட்டவணை வகுப்பினர் (SC)/பழங்குடியினர் (ST) அல்லது பிற சாதிச் சான்றிதழ்.

9. தேசிய குடிமக்கள் பதிவேடு (நடைமுறையில் உள்ள இடங்களில்)

10. மாநில/உள்ளாட்சி அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட குடும்பப் பதிவேடு.

11. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலம்/ வீடு ஒதுக்கீட்டுச் சான்றிதழ்.

12. ஆதார் அட்டைக்கு, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கடித எண்.23/2025ERS/Vol.II, நாள் 09.09.2025இல் (இணைப்புII) வெளியிடப்பட்ட அறிவுரைகள் பொருந்தும்.

13. 01.07.2025ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட பீகாரின் சிறப்பு தீவிரத் திருத்தத்தின் வாக்காளர் பட்டியலின் பிரதி கணக்கீட்டுப் படிவத்தினை வாக்காளர் நிரப்புவதற்கான தகவல்களும் கணக்கீட்டுப் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களின் பட்டியலும் இந்தியத் தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள கணக்கீட்டுப் படிவத்தின் பின்புறமாக கொடுக்கப்பட்டுள்ள படிவத்தினை நிரப்புவதற்கான தகவல்களும், படிவத்தோடு இணைக்கப்படவேண்டிய ஆவணங்களின் பட்டியலும் மேலே விவரிக்கப்பட்டுள்ளது. படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வலைதள முகவரியினை https://voters.eci.gov.in/என்ற இணையதளத்தின் முந்தைய வாக்காளர் பட்டியலோடு ஒப்பீடு செய்து பார்க்க வேண்டும் என்பது நிபந்தனை. அதில் வேறுபாடு இருக்குமாயின் அந்தக் குறிப்பிட்ட வாக்காளர் தேர்தல் பதிவு அலுவலர் (ERO) மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும். இல்லையெனில், அந்தக் குறிப்பிட்ட வாக்காளர்களுக்கு வாக்குரிமை ரத்து செய்யப்படும். தேர்தல் ஆணையத்தின் இந்த வழிகாட்டும் முறை வாக்காளர்களுக்கு பெருத்த நடைமுறைச் சங்கடங்களை நிச்சயம் உருவாக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை!

**இந்தியத் தேர்தல் ஆணையம் குடியுரிமைப் (Citizenship) பற்றிய முடிவெடுக்க சட்டப்படி இயலாது. ஒருவரின் குடியுரிமையைத் தீர்மானிப்பது இந்திய அரசியல் சட்டமும் அதனை நடைமுறைப்படுத்துகின்ற உள்துறை அமைச்சகமும்தான். எனவே, இந்திய குடியுரிமை பெற்றவர்தான் தேர்தலில் வாக்களிக்க முடியும் என்றாலும் அந்தக் குடியுரிமையைத் தீர்மானிக்கும் அதிகாரம் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு இல்லை என்பதும்,அந்த அதிகாரம் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்திற்கும் மட்டுமே உண்டு என்பதையும் இங்கே இந்தக் கட்டுரை மூலம் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.**

**எனவே, வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) இத்தகைய மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளை எப்படி சட்டப்படி தீர்த்து வைப்பார் என்பதும், அதுவும் குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்த்து வைப்பது என்பதும் எவ்வளவு குழப்பங்களை உருவாக்கும் என்பதில் தேர்தல் ஆணையமும் ஒன்றிய அரசும் ஆழ்ந்து பரிசீலிக்க கடமைப்பட்டுள்ளனர். இதுபோன்று பல்வேறு பிரச்சினைகளில் இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் மூலம் உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கிறது என்பதை யாராலும் மறுக்கவியலாது. அதற்கான உடனடித் தீர்வையும் வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) வழங்கிடவும் இயலாது. இந்தக் குழப்பங்களாலும் குதர்க்கங்களா லும் உருவாகும் விளைவுகள் பலரின் வாக்களிக்கும் உரிமைகளை மறைமுகமாக பறித்துவிடும் சூழ்நிலைகளை உருவாக்கும்.**

**இத்தகைய சூழ்நிலையின் காரணமாகத்தான் பீகாரில் பலலட்சக் கணக்கான மக்களின் வாக்குரிமை நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தவறுகளையெல்லாம் சட்டப்படி நீக்கிவிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கக்கூடிய சூழ்நிலை உருவாக்க வேண்டு மேயானால் அதற்கான காலஅவகாசமும் கொடுக்கப்படவில்லை. எனவே, இந்தச் சூழ்நிலைகளை ஆய்வு செய்வோமேயானால், இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி என்பது பெரும்பாலான வாக்காளர்களின் உரிமையைப் பறிக்கும் நிகழ்ச்சியாகத்தான் முடியும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை!!**

இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி என்பது சட்டமன்றத் தேர்தல்கள் சிலமாதங்களில் நடைபெறவுள்ள 12 மாநிலங்களையும், யூனியன் பிரதேசங்களையும் உள்ளடக்கிய பகுதிகளுக்குத்தான் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த முறை பொதுத்தேர்தல்களுக்கு குறுகியகால இடைவெளியில் கொண்டுவருவதென்பது சட்டப்படி சரியானதும் முறையானதும் அல்ல என்பதை முன்னாள் நாடாளுமன்ற மக்கள் சபையின் பொதுச்செயலாளராக பதவிவகித்த பி.டி.டி. ஆச்சாரி (P.D.T. Achary) என்பவர் ‘இந்து’ ஆங்கில நாளிதழில் நவம்பர் 12ஆம் நாள் இந்தச் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின் குறைபாடுகள் குறித்து விளக்கமான கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்கள்.

**(The infirmities in the SIR of electoral rolls) இந்தக் கட்டுரையின் மூலம் கட்டுரையாளர் பி.டி.டி.ஆச்சாரி அவர்கள் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது சட்டப்படி சரியானது அல்ல என்றும், காலஅவகாசம் என்பது போதுமானதாக இல்லை என்பதையும் சுட்டிக்காட்டி, இது தேவையற்ற நடவடிக்கை என்று தெளிவுபட குறிப்பிட்டுள்ளார்கள். இதில் இந்தியத் தேர்தல் ஆணையம் சுதந்திரமாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்று கருத இயலவில்லை. மாறாக, ஒன்றியத்தில் ஆட்சியில் உள்ள பாரதிய ஜனதா கட்சிக்கு மறைமுகமான ஆதரவை வழங்குவதற்காக திட்டமிட்டு அறிமுகப்படுத்தப்பட்டத் திட்டம்தான் இந்த எஸ்.ஐ.ஆர் என்கின்ற மோசடித் திட்டம்.**

**இந்தத் திட்டத்தின் மூலம் நியாயமான வாக்காளர்கள் ஒருதலைப் பட்சமாக அவர்களது உரிமைகள் நிராகரிக்கப்படு வதற்கான வாய்ப்புகள் நிரம்ப இருப்பதால் இந்த திட்டம் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டிய திட்டம் என்பதே பெரும்பான்மை வாக்காளர்களின் கருத்தாக உள்ளது. இந்த முறையின் மூலம் நேரடி வாக்குத் திருட்டு இல்லாவிட்டாலும், இது ஓர் “கன்னக்கோல்” போட்டு (முதலில் ஓட்டைப் போட்டு அதன் மூலம் திருடுவது) அதன் மூலம் ஓட்டு திருடும் விசித்திரமான முறையை அறிமுகப்படுத்தியுள்ளது இந்தியத் தேர்தல் ஆணையம் என்பதே மக்களின் கருத்து. இந்த முறை ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை!!**



கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், மணலூர்பேட்டை தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே நீர்வளத்துறையின் சார்பில் புதிய அணைக்கட்டு அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழாவினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் 19.11. 2025 அன்று தொடங்கி வைத்து அணைக்கட்டு அமையும் இடத்தினை பார்வையிட்டனர். விழாவில் எம்.எஸ்.பிரசாந்த், வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், தே. மலையரசன் மற்றும் அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தாமதமின்றி

# நெல்லின் ஈரப்பத அளவை 22 சதவீதமாக உயர்த்திடுக!

## ‘‘தீக்கதிர்’’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 20-

விவசாயிகளைக் கரையேற்ற நெல்லின் ஈரப்பத அளவை 22 சதவீதமாக உயர்த்தி ஒன்றிய அரசு தாமதமின்றி அறிவித்திட வேண்டும் என “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் ஈரப்பத அளவை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்தக்கோரி முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு மீண்டும் கடிதம் எழுதியுள்ளார். இதன் பிறகாவது அவ்வாறு மோடி அரசு செய்யுமா என்பதே கேள்வி!

கடந்த அக்டோபர் மாதம் 19 ஆம் தேதி ஏற்கெனவே முதல்வர் ஸ்டாலின் இதுபோன்ற கடிதத்தை ஒன்றிய அரசுக்கு எழுதியிருந்தார். கடும் மழையால் நெல் முளைத்துப் போய் வீணாகிவிட்டிருந்த நிலையில் தான் அந்தக் கடிதம் எழுதப்பட்டது. ஆனால் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் ஒரு வாரம் கழித்து மூன்று குழுக்களை அனுப்பி ஆய்வு செய்ய வைத்தது.

அந்தக் குழுக்கள் 12 மாவட்டங்களில் அக்டோபர் 25, 26, 27 என மூன்று நாட்கள் ஆய்வு செய்தது. வாளாடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல்லின் ஈரப்பத அளவு 20.5 சதவீதமாக இருந்தது. அந்த குழுவின ரிடம் விவசாயிகள் ஈரப்பத அளவை உயர்த்தும் முடிவை விரைவில் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ஆனாலும் ஒரு மாதமாகும் நிலையிலும் கூட ஒன்றிய அரசு ஈரப்பத உயர்வு முடிவு அறிக்கையை வெளியிடவில்லை. தற்போது மீண்டும் கனமழையால், அறுவடையான நெல்மூட்டைகள் பாதிக்கப்படும் நிலையிலேயே முதல்வர் மீண்டும் கடிதம் எழுதியுள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு 2014இல் பதவியேற்ற நாள் முதலே விவசாயிகளுக்கு விரோதமாகவே நடந்து கொண்டிருக்கிறது. விவசாயிகளின் விளை பொருள்களுக்கு ஒன்றரை மடங்கு விலை வழங்குவதாகக் கூறிய தேர்தல் வாக்குறுதி காற்றிலேயே கலந்து விட்டது. 2019இல் விவசாயிகள் ஓராண்டுக்கு மேல் போராட்டம் நடத்தியபோது அதை விலக்கிக் கொள்வதற்காக கொடுத்த வாக்குறுதியும் ஐந்தாண்டுகளாகியும் நிறைவேற்றப் படவில்லை.

ஏற்கெனவே கட்டுபடியான விலை கிடைக்காமல் அவதிப்படும் விவசாயிகள் தற்போது ஈரப்பதம் அதிகமாக உள்ளது எனக்கூறி கொள் முதல் செய்ய மறுக்கப்படுவதாலும் பாதிக்கப் படுகிறார்கள். நெல்லின் ஈரப்பத அளவை மாநில அரசே அந்தந்த மாவட்ட ஆட்சியரே தீர்மா னிக்கச் செய்வதே விவசாயிகளுக்குப் பயன ளிப்பதாகும் என்று மத்திய ஆய்வுக் குழுவிடம் விவசாயிகள் வலியுறுத்தியிருந்தனர். ஆனால் எந்தக் கோரிக்கையுமே ஏற்கப் படவில்லை.

விவசாயிகளை வஞ்சிப்பதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. கார்ப்பரேட் நண்பர்களுக்கு ஒரு கஷ்டம் என் றால் துடிதுடித்துப் போகும் மோடி அரசு விவசாயிகளை கண்ணீர்க் கடலில் தத்தளிக்க வைப்பதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது.

மாநிலத்தின் கட்டுப்பாட்டில் நடந்து கொண்டிருந்த நெல்கொள்முதலை மத்திய கூட்டுறவுத் துறையை துவங்கி ஒன்றிய அரசு கைப்பற்றும் விதத்தில் நடந்தது தான் இந்தக் கொடுமைக்குக் காரணம். எனவே துன்பத்திலும் துயரத்திலும் வாடும் விவசாயிகளைக் கரையேற்ற இப்போதாவது நெல்லின் ஈரப்பத அளவை 22 சதவீதமாக உயர்த்தி ஒன்றிய அரசு தாமதமின்றி அறிவித்திட வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் அறிவிப்பு!



தூத்துக்குடி, நவ. 20-

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா இராதகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (20.11.2025) மாலை 4.30 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் எனது (அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்) தலைமையிலும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவசியம் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1.கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா நலத்திட்டம் வழங்குதல்.

2.சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் (SIR) பற்றி

3.கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி மேற்கு ஒன்றியம் மானவள்ளி ஊராட்சியில் வாக்காளர் சிறப்பு திருத்தம் (SIR) நடைபெற்று வருவதை சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, தொகுதி பார்வையாளருடன் நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் க.முருகேசன், ஒருங்கிணைப்பாளர் சி.கே.சுப்பிரமணி, ஒன்றிய நிர்வாகிகள், BLA2, BLO ஆகியோர் கலந்து கொண்டனர்.